**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**Case No.** **CC.No.216/2022**

Deposition of **PW-4/ LW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சுந்தரராமன் | **Age** | : | 50 |
| **Father's / Husband Name** | : | நாராயணன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | மோட்டார் வாகன ஆய்வாளர் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the07 day October 2025

எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1)நான் தற்போது உத்தமபாளையம் பகுதி அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை II ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.06.2022 அன்று பணியில் இருந்த போது குற்ற எண் 173/2022 இ.த.ச பிரிவு 279, 304A வழக்கில் தொடர்புடைய TN 60 Z 0152 என்ற இருச்சக்கர வாகனத்தை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். ஆய்வின் போது காப்புச் சான்று, ஓட்டுநர் உரிமம் சமர்பிக்கபடவில்லை பதிவு சான்று நடப்பில் இல்லை வாகனத்தின் பிரண்ட் போர்க், முன்பக்க சக்கரம், பின் சக்கரம், பின்புற சாக் அப்சர்வர் , பின் இருக்கை, ஹாண்டல் பார், முகப்பு விளக்கு சேதம் அடைந்து காணப்பட்டது. தடைத்திறன் சோதனை செய்யும் நிலையில் இல்லை. மேற்கண்ட விபத்தானது எவ்வித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என சான்று வழங்கினேன் .( **TN 60 Z 0152 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2) மேலும் அதே வழக்கில் சம்மந்தப்பட்ட TN 60 M 7677 என்ற நிலைத்தட பேருந்தை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். ஆய்வின் போது தகுதி சான்று , அனுமதி சீட்டு,காப்புச் சான்று, ஓட்டுநர் உரிமம் முறையாக இருந்ததது. வாகனத்தின் முன் வலது பக்க சோ பேனல் சேதம் அடைந்து காணப்பட்டது வலது பக்க முகப்பு விளக்கு , முன்புற காற்று தடுப்பு கண்ணாடி சேதம் அடைந்து காணப்பட்டது.வாகனத்தின் தடைத்திறன் முறையாக இருந்தது . மேற்கண்ட விபத்தானது எவ்வித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என சான்று வழுங்கினேன் .( **TN 60 M 7677 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரி மற்றும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும், போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2025.10.07 17:12:53 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**